DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC. No. 60/2023 |
| Deposition of witness | : | PW- 7 |
| Name | : | சரண்பிரசாத் |
| Father's /Husband Name | : | சுப்ரமணியன் |
| Village | : | திருவாரூர் |
| Taluk | : | திருவாரூர் |
| Age | : | 38 |
| Occupation | : | மருத்துவர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 10th day October, 2024.
Both absent petition U/sec. 317 Cr.P.C filed and allowed.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 15.01.2023-ம் தேதி காலை 09.10 மணிக்கு வெங்கடேஷ் என்பவர் நன்னிலம் அரசு மருத்துவமனையில் இருந்து மேல் சிகிச்சைக்காக பரிந்துரைக்கப்பட்டு சிகிச்சைக்கு வந்தவரை பணி மருத்துவர் அருண்குமார் என்பவரின் விபத்து பதிவேடு பதிவு செய்யப்பட்டு உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு இருந்தவருக்கு அன்றைய தினம் காலை 09.11 மணிக்கு சிகிச்சையளிக்க தொடங்கினேன். அவரது வலது கை ஆள்காட்டி விரலில் ஏற்பட்ட காயத்திற்கு நுண்கதிர் படம் எடுத்து பார்த்ததில் எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தது. அவருக்கு ஏற்பட்டிருந்த எலும்பு முறிவிற்கு உரிய சிகிச்சையளித்து கடந்த 21.01.2023-ம் தேதி சிகிச்சையிலிருந்து விடுவித்தேன். மேற்படி வெங்கடேஷ் என்பவருக்கான விபத்து பதிவேடு **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. காயச்சான்று **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சிகிச்சையின் முடிவில் வெங்கடேஷ் என்பவருக்கு ஏற்பட்ட காயமானது கொடுங்காயம் என்ற சான்று வழங்கியுள்ளேன். மேற்படி வெங்கடேஷ் அவர் சொல்லிய விதத்தில் தாக்கப்பட்டால் மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

யாருக்கு நான் சிகிச்சையளித்தேன் என்றால் ரவி மகன் வெங்கடேஷ் என்பவருக்கு சிகிச்சையளித்தேன். ஆனால் எனது வாக்குமூலத்தில் ராஜேந்திரன் மகன் வெங்கடேஷ் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் நான் சிகிச்சையளித்தது ரவி மகன் வெங்கடேஷ் என்பவருக்கு தான் சிகிச்சையளித்தேன். விபத்து பதிவேட்டில் காயமடைந்த வெங்கடேஷ் 14.01.2023–ம் தேதி தாக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து பதிவேட்டில் காயமடைந்த வெங்கடேஷ் என்பவரை ராகவன் என்பவர் மருத்துவமனைக்கு அழைத்து வந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். போலிசார் விசாரணையில் நான் காயம் ஏற்பட்ட இடங்களை குறிப்பிட்டேனா என்றால் குறிப்பிட்டேன். பொதுவாக ஒரு நபர் நிலை தடுமாறி கீழே விழும்போது பின்பக்கமாக விழுந்தால் மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். அவ்வாறு கீழே விழும்போது வலது கையை கீழே ஊன்றினால் கை முறிய வாய்ப்புள்ளது என்றால் சரிதான். நான்போலிஸ் விசாரணையில் ராஜேந்திரன் மகன் வெங்கடேஷ் என்பவருக்கு சிகிச்சையளித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தட்டச்சு பிழை காரணமாக அவ்வாறு குறிப்பிடப்பட்டிருக்கலாம். ஆனால், நான் ரவி மகன் வெங்கடேஷ் என்பவருக்கு தான் சிகிச்சையளித்தேன். நான் சொல்வதுபோல் மேற்படி நபருக்கு காயம் ஏற்படவில்லை என்றாலும், நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

(ஓம். M.S. பாரதிதாசன்)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், நன்னிலம்.